# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),

**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**ஆணை நாள் 11.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். (i) S.A 5385/விசாரணை/E/2023 (ii) S.A 5386/விசாரணை/E/2023 (iii) S.A 5387/விசாரணை/E/2023**

திரு வி.ராமகிருஷ்ணன் . மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
சோழிங்கநல்லூர் வட்டம்,
சென்னை மாவட்டம்

******

**ஆணை**

1) இவ்வழக்கு குறித்த ஆவணங்களை இன்று (10.06.2026) பரிசீலித்த ஆணையம் இவ்வாணையத்தின் 28.10.2024 நாளிட்ட உத்தரவு முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்பதை கண்டனத்துடன் பதிவு செய்கிறது. மேலும், இவ்வழக்கின் பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர் இவ்வாணையத்தில் 30.07.2025 அன்று ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவு பத்தி 5(iv)-ன்படி, மனுதாரருக்கு தாமதமாக பதில் வழங்கியதால் அவருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்கு நஷ்டஈடாக அவருக்கு ரூபாய் 5,000/-க்கான (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வரைவோலை 29.07.2025 அன்று அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து, அதன் நகலையும், மனுதாரர் அதனை 31.07.2025 அன்று பெற்றுக் கொண்டதற்கு தபால் துறை இணையதளத்திலுள்ள பதிவின் நகலையும் ஆணையத்தில் சமர்ப்பித்தார். ஆனால், மேற்படி உத்தரவு பத்தி 5 (iii)-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நிறைவேற்றப்படவில்லை,

2) இதற்கிடையில், மனுதாரர் மேற்படி மூன்று வழக்குளிலும் தனக்கு முழுமையான பதில் கிடைக்கபெறவில்லை என 23.07.2025 அன்று இவ்வாணையத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

3) ஆகவே, மேற்படி **28.10.2024 தேதியிட்ட உத்தரவில் பத்தி (ii) மற்றும் (iii) ஆகியவற்றை நிறைவேற்றிவிட்டு,** மனுதாதரருக்கு பதிவஞ்சல் மூலம் தகவல் தெரிவித்துவிட்டு, அதன் நகலையும், மனுதாரர் அதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலையும் **இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று தவறாமல் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென மேல்முறையீட்டு அலுவலர்/சோழிங்கநல்லூர் வட்டாட்சியருக்கு** இவ்வாணையம் உத்தரவிடப்படுகிறது.

4) இவ்வாணையத்தின் 28.10.2024 நாளிட்ட உத்தரவினை முழுமையாக நிறைவேற்றத் தவறிய அன்றைய பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அதிகபட்ச அபராதம் ஏன் விதிக்கலாகாது என்பதற்கான விளக்கத்தையும் மற்றும் சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் அவர் மீது துறை ரீதியான ஒழுங்கு

நடவடிக்கை மேற்கொள்ள அவரது உயரதிகாரிக்கு ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்து மூலமான விளக்கத்தையும் பெற்று **இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று தவறாமல் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென மேல்முறையீட்டு அலுவலர்/சோழிங்கநல்லூர் வட்டாட்சியருக்கு** இவ்வாணையம் உத்தரவிடப்படுகிறது.

5) மேலும், இவ்வாணையத்தின் 28.10.2024 நாளிட்ட உத்தரவினை முழுமையாக நிறைவெற்றாமல் மனுதாரருக்கு தகவல் வழங்குவதில் காலதாமதம் செய்தததற்கும், மனுதாரருக்கு மனஉளைச்சல் ஏற்படுத்தியதற்காகவும், **தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(8)(b)-ன் கீழ் மனுதாரருக்கு ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) இழப்பீடாக பொது அதிகார அமைப்பு வழங்கி** மனுதாரர் அதை ஏற்பளிப்பு செய்த விவரத்தினை **இவ்வாணையத்தில் 27.07.2026 அன்று தவறாமல் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென மேல்முறையீட்டு அலுவலர்/சோழிங்கநல்லூர் வட்டாட்சியருக்கு** இவ்வாணையம் உத்தரவிடப்படுகிறது.

6) மேற்குறித்த உத்தரவுகளை நிறைவேற்ற தவறும்பட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் கீழான நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என்று **மேல்முறையீட்டு அலுவலர்/சோழிங்கநல்லூர் வட்டாட்சியருக்கு** இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள். (i) S.A 5385/விசாரணை/E/2023 (ii) S.A 5386/விசாரணை/E/2023 (iii) S.A 5387/விசாரணை/E/2023**

**பெறுநர்**

மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்.
சோழிங்கநல்லூர் வட்டம்,
சென்னை மாவட்டம்/

பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம். சோழிங்கநல்லூர் வட்டம், (28.10.2024 தேதியில்)
சென்னை மாவட்டம்
(மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர் சோழிங்கநல்லூர் மூலமாக)

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்.
சோழிங்கநல்லூர் வட்டம்,
சென்னை மாவட்டம்

திரு வி.ராமகிருஷ்ணன்,
எண்.3, ஷெனாய் தெரு,
நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034

Copy to: File
CR/PA